May day as paid holiday

* 248 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government propose to declare May day as a paid holiday; and

(*b*) when it will be given effect to?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகிறது. இதை செயல்படுத்துவதற்கான மசோதா ஒன்று விரைவில் சட்டமன்றப் பேரவையில் கொண்டுவரப்படும்.

THIRU K. VINAYAKAM : In the Bill that is in the offing and that will be introduced in this House, will the Government take care to bring within its purview the workers working in the private sector also? (Interruption) In that event, will the Government declare a holiday with salary for our own workers also?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : இந்த அரசாங்கத்தினுடைய எண்ணமே அதுதான். இதைப்பற்றி தொழில் அதிபர்களும், தொழிலாளர் பிரதிநிதிகளும் கூடி விவாதித்து மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தில், (ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு) இதுபற்றி தீவிரமாக முடிவு எடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன்பேரில் முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் தீவிரமாக ஆலோசித்து, இந்த முடிவுக்கு வந்தார்கள்.

புதிய நெல் வகை

■ 237 வினா—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறை அரசு விதைப் பண்ணையில் ஆடுதுறை 27-க்குப் பிறகு புதிய நெல் வகை ஏதும் கண்டறியப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) ஆம், 1966-ம் ஆண்டில் ஆடுதுறை 28 வகை நெல் உருவாக்கிப் பழக்கத்துக்கு விடப்பட்டது. இது ஆடுதுறை 3, சீனரகம் சி.எச். 42 இவற்றின் கலப்பினமாகும். இது ஆடுதுறை 3-ஐ விட அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடியதாகும். ஆனால் ஆடுதுறை 27 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது விளைச்சலிலும் தானிய தரத்திலும் இது மேம்பட்டதல்ல. இது விதைத்தது முதல் 102 நாட்களில் அறுவடையாகும் பயிராகும். தண்ணீர் தேங்கி நின்றாலும் இது கதிர் சாயும் தன்மையில்லாதது. ஆடுதுறை 27-ஐக் காட்

1970 மார்ச் 6]

டிலும் தரத்தில் உயர்ந்த புதிய நெல் வகைகளை உருவாக்கும் பணி ஆடுதுறையிலுள்ள வட்டார ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொண்டும் நடைபெற்று வருகின்றது.

திரு. கே. விநாயகம்: ஏ.டி.டி. 27 என்கின்ற நெல்லைவிட பின்னாலே புதியதாக ஒரு ரகம் கண்டுபிடித்து, அதற்கு ஏதோ ஒரு புதிய பெயர், நமது அமைச்சர்களுக்குள்ளே ஒரு அமைச்சரின் பெயரை அதற்கு வைத்திருப்பதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். அப்படியென்றால் என்ன பெயர்? அந்த விதையினால் நமக்கு அதிகமாக விளைச்சல் கிடைக்குமா?

What are the important features of that variety?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: புதியதாக கண்டு பிடிக்கப்பட்ட அந்த நெல்வகை ஆடுதுறை வட்டார ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடித்தது அல்ல. கோவையில் கண்டுபிடித்ததாகும். ஐ.ஆர். 5, ஐ.ஆர். 8 இவைகளைவிட அதிகமாக விளைச்சல் தரக்கூடியது. ஒரு ஏக்கருக்கு 4,000 கே.ஜி. விளைச்சல் தரக்கூடியது. இன்னும் நல்ல சன்ன அரிசியும் கூட. அது மிகவும் நல்ல அரிசி என்று கூறப்படுகிறது. அதற்கு நம்முடைய முதல்வரின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

திரு. ப. மகாதேவன்: தலைவர் அவர்களே, அதே போன்று உணவு அமைச்சர் கூறியது போல, ஜெயா, பத்மா, அல்லது ஜெயா, லலிதா என்ற ஒரு வகை ரகம் வந்திருக்கிறதா? அது நடப்பில் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இருக்கிறது. ஜெயா, பத்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. விளக்கம் கோரல்

மராட்டிய மாநிலத்தில் வாழும் தமிழர் நிலைபற்றி தமிழக முதலமைச்சர் தெரிவித்த கருத்து பற்றி மராட்டிய முதலமைச்சர் மராட்டிய சட்டமன்றத்தில் அளித்த அறிக்கை பற்றி வந்துள்ள செய்தி குறித்து.

திரு. க. இராமமூர்த்தி: ஆன் எ பாயிண்டு ஆப் கிளாரிபிகேஷன், ஸார். தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் அவர்கள் மகாராஷ்டிர தமிழர் நிலை பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த பொழுது, அதற்கு பதில் அளிக்கையில் நமது முதல் அமைச்சர் அவர்கள் மராட்டிய மாநிலத்திலுள்ள தமிழர்கள் நிலை பற்றி மராட்டிய மாநில முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுத இருப்ப